ORIGINAL ARTICLE

# நடுகற்களில் விலங்குச் சின்னங்கள் [NAṬUKAṞKAḶIL VILAṄKUC CIṈṈAṄKAḶ]

## ANIMAL SYMBOLS IN THE HEROIC STONES

**இரா.பிரகாஷ் / R. Prakash *[1]**

[1] Krishna College of Education for Women, Sathinaickanpalayam, Thiruchengode Taluk, Namakkal, Tamilnadu, India. Email: prakash130683@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/191

**Abstract**

This paper deals with the tradition of venerating stones in memory of the hero is the tradition of hero worship among Tamil culture. An analysis of the literature, images and writings found on the tombs shows that the tomb was made for a warrior who died in the seizure or recovery of cows and for those who died in battle with deadly beasts. On the hero stones planted for the warriors, animal symbols are engraved to express the heroism of the warrior. The figure of the animal is carved and planted along with the warrior. The fear of the dead and the belief that our ancestors will protect us are essential to worship. It is known that not only humans but also tigers, chickens, dogs, pigs, snakes, deer, elephants, parrots and cows were planted in the heroic stone. From the structure of the tombs and the messages mentioned in them, one can see the various historical backgrounds such as the time, the regime, the forms of writing, the methods of warfare and the cults. Library research was done and explanatory method was adopted for this study. The finding of the research shows that knowledge of experts is not semantically different, but rather that information is more connected between each other. The conducted experiments demonstrated that the size of the words and retrieval speed of words from memory varies between people with different background knowledge. The findings of our study could also help to give better, personalized instructions to the users in different fields, and help with the construction of a more interactive dialog between the user and an intelligent tutoring system.

**Keywords:** Tradition, Worshiping, heroic stone, warrior, animals.

**ஆய்வுச் சாரம்**

வீரத்தின் நினைவாகக் கற்களை நட்டு வழிபடும் மரபே வீர வழிபாட்டு மரபாகும். இலக்கியத் தரவுகளையும், நடுகற்களில் காணப்படும் உருவங்களையும் எழுத்துக்களையும் ஆராயும் போது ஆநிரை கவர்தல் அல்லது மீட்டலில் உயிர் துறந்த வீரனுக்கும், கொடிய விலங்குகளுடன் போரிட்டு இறந்துபட்டவர்களுக்கும் நடுகல் நடப்பட்டுள்ளது. மறவர்களுக்கு நடப்பட்ட நடுகற்களில் பொறிக்கப்பட்ட விலங்குகளின் சின்னங்கள் மறவனின் வீரத்தினை வெளிப்படுத்துமாறு அமைந்துள்ளன. நடுகல் வீரனுடன் விலங்குகளும் சேர்த்துச் செதுக்கப்பட்டு நடப்பட்டுள்ளன. இறந்தவர் மீது கொண்ட அச்சமும், நம்முன்னோர் நம்மைப் பாதுகாப்பர் என்ற நம்பிக்கையும் நடுகல் வழிபாட்டிற்கு மிகவும் முக்கியத்துவமாக அமைந்தன. மனிதனுக்கு மட்டும் அல்லாமல் புலி, கோழி, நாய், பன்றி, பாம்பு, மான், யானை, கிளி மற்றும் மாடு ஆகியவற்றிற்கும் நடுகற்கள் நடப்பட்டன என்பதை அறியமுடிகின்றது. நடுகற்களின் அமைப்பையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளையும் கொண்டு, அதன் காலகட்டம், ஆட்சிமுறை, எழுத்து வடிவங்கள், போர்முறைகள், வழிபாட்டு முறைகள் முதலிய பல்வேறு வரலாற்றுப் பின்புலங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**கருச்சொற்கள்:** மரபு, வழிபாடு, நடுகல், மறவன், விலங்குகள்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 28th Dicember 2021, revised 17th January 2022, accepted 28th January 2022

## முன்னுரை

இறந்த முன்னோர் பொருட்டுச் செய்த வழிபாட்டுடன் தொடர்புடையதே வீர வழிபாடு எனலாம். போரில் வெற்றி பெறும் பொருட்டுத் தன்னுயிரைத் தியாகம் செய்து மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து இறந்தவன் வீரன் என்று அழைக்கப்படுகின்றான். அத்தகைய வீரனது செயலைப் போற்றவும் அவனுக்கு மரியாதை செலுத்தவும் மக்கள் அவன் நினைவாகக் கல்லெழுப்பினர். அவ்வாறு நடப்பட்ட கல்லை ‘நடுகல்’ என்கின்றனர் (Srinivasan, 1990)[1]. வீரத்தின் நினைவாகக் கற்களை நட்டு வழிபடும் மரபே வீர வழிபாட்டு மரபாகும். நடுகற்களில் வீரனின் உருவம், பெயர், செயல் முதலிய குறிப்புகள் பெரும்பாலும் இருப்பதைக் காணமுடிகின்றன. இலக்கியத் தரவுகளையும், நடுகற்களில் காணப்படும் உருவங்களையும் எழுத்துக்களையும் ஆராயும் போது ஆநிரை கவர்தல் அல்லது மீட்டலில் உயிர் துறந்த வீரனுக்கும், கொடிய விலங்குகளுடன் போரிட்டு இறந்துபட்டவர்களுக்கும் நடுகல் நடப்பட்டுள்ளது என்பதை உணரமுடிகின்றது. போரில் வீர மரணம் அடைந்தவர்களுக்கு மட்டுமின்றி வெவ்வேறு காரணங்களால் இறந்தவர்களுக்கு மக்கள் நடுகற்களைத் தோற்றுவித்தனர் (Burton Stein, 1976)[2]. அவற்றுள்

சில வகை நடுகற்கள் பெரும்பான்மையும் சில வகை நடுகற்கள் குறைந்த அளவும் கிடைத்துள்ளன.

**நடுகற்களில் விலங்குச் சின்னங்கள்**

மறவர்களுக்கு நடப்பட்ட நடுகற்களில் பொறிக்கப்பட்ட விலங்குகளின் சின்னங்கள் மறவனின் வீரத்தினை வெளிப்படுத்துமாறு அமைந்துள்ளன. இதுபோன்ற நடுகற்களும் பல ஆய்வுகளில் கண்டறியப்பட்டுப் பதிவு செய்யப் பட்டுள்ளன. நடுகல் வீரனுடன் விலங்குகளும் சேர்த்துச் செதுக்கப்பட்டு நடப்பட்டுள்ளன.

**புலிக்குத்திக்கல்**

விலங்குகளிடமிருந்து ஊர் மக்களைக் காப்பாற்ற அவற்றுடன் சண்டையிட்டு மடிந்த வீரனுக்கு நடுகல் எடுக்கப்பட்டது. அவ்வகையில் புலியைக் கொன்ற வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் "புலிக்குத்திக்கல்" எனப்பட்டது (Vanamamalai, 1975)[3]. முதலாம் மகேந்திர வர்மப் பல்லவனின் காலத்தைச் சேர்ந்த மோத்தக்கல் நடுகல்லில் வலக்கையில் குறுவாளுடன் நிற்கும் வீரனின் இடக்கையில் புலி பாய்ந்து கடித்த நிலையைச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

**பன்றிகுத்திக் கல்**

மக்களையும் பயிர்களையும் அழித்துச் சேதம் விளைவித்த காட்டுப் பன்றியைக் கொல்லும் போது வீர மரணமடைந்த மறவர்க்கு நடப்பட்டது பன்றிகுத்திக் கல். கி.பி 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரெட்டியின் நடுகல் கல்வெட்டு, அய்யப்ப தேவன் ஆட்சியில் அரையகட்டி என்பவன் காட்டுப் பன்றியைக் குத்திக் கொன்ற போது தானும் மடிந்தான் என்ற செய்தியைக் கூறுகிறது (Vanamamalai, 1975)[3].

**மான்குத்திப் பட்டான் கல்**

மிக அரிதாக மான் குத்திப்பட்டான் கல் காணப்படுகிறது. ஏற்காட்டில் உள்ள குண்டூர் எனும் கிராமத்தில் "மான் குத்திப்பட்டான் கல்" சேலம் வரலாற்று ஆய்வு மையத்தாரால் கண்டறியப்பட்டுள்ளது. இது மான் வேட்டையில் இறந்தவன் நினைவாகப் படைக்கப்பட்டது எனக் கருதப்படுகின்றது(Vanamamalai, 1975)[3] .

**பாம்புப்பட்டான் கல்**

பாம்புகளால் மக்களுக்குத் துன்பம் ஏற்படும் போது அந்தப் பாம்புகளைப் பிடிக்கச் சென்று மடிந்த வீரர்களுக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் சில இடங்களில் பாம்புப்பட்டான் நடுகல்கள் கண்டறியப்பட்டுள்ளன (Vanamamalai, 1975)[3]. என்பதைச் சேலம் வரலாற்று ஆய்வு மையம் பதிவுசெய்துள்ளது.

**யானைக் குத்திப்பட்டான் கல்**

வரலாற்றுக் காலம் முதலே போரில் யானைகளைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்துள்ளது. காட்டு யானைகளைப் பிடித்துப் போர்ப் பயிற்சி கொடுத்துப் போரில் பயன்படுத்தினர். காடுகளின் அருகே உள்ள கிராமங்களில் காட்டுயானைகள் பயிர்களை நாசம் செய்து வந்தன. இவ்வாறு போரிலோ யானை வேட்டையின் போதோ யானையால் கொல்லப்பட்ட வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் "யானைக்குத்திப்பட்டான் கல்" எனப்பட்டது. கி.பி 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவமாற வர்மன் ஆட்சியின் கீழ் நடப்பட்ட நடுகல்லில் வலக்கையில் கத்தியும், இடக்கையில் வில்லும் தாங்கிய வீரன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது (Vanamamalai, 1975)[3]. இந்த நடுகற்கள் சிலவற்றில் யானையினது உருவம் இல்லாமலும் செதுக்கப்பட்டுள்ளன.

**கோழிக் கற்கள்**

மனிதனுக்கு மட்டுமல்லாமல், மனிதன் தான் வளர்க்கும் நாய், கோழி போன்றவற்றிற்கும் நடுகல் எடுத்து வழிபட்டுள்ளான். அரசலாபுரம் என்ற ஊரில் கோழிக்கான நடுகல் கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது. இந்தளூர் என்ற ஊரில் கோழிக்கான மற்றொரு நடுகல் கண்டறியப்பட்டுள்ளது (Vanamamalai, 1975)[3]. இவற்றைச் சேலம் வரலாற்று ஆய்வு மையம் கண்டறிந்து பதிவு செய்துள்ளது. இவை கோழிச்சண்டையில் இறந்த கோழிகளுக்கான நடுகற்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

**மாடு பொருந்தார் கல்**

ஆநிரை மீட்டவர்களுக்கு அதிகப்படியான நடுகற்கள் நாட்டப்பட்டமைக்கு இலக்கியங்களும் கிடைத்த நடுகற்களுக்கும் சான்றாக நிற்கின்றன. அவ்வாறு எடுக்கப்பட்ட நடுகற்களில் மாடு உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். கி.பி.9ஆம் நூற்றாண்டு நடுகல்லில் பூமயன் என்பவன் எதிரிகள் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்டு வீரசுவர்க்கம் எய்தினான் என்பதைக் குறிக்கின்றது. இது பெரியபன்னிமடுவு என்ற ஊரில் கண்டறியப்பட்டது. சேலம் மாவட்டம் சிவசங்கரபுரம் அருகிலுள்ள பட்டத்துறை எனும் ஊரில் 17ஆம் நூற்றாண்டு ஜல்லிக்கட்டு நடுகல் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. இது 165 செ.மீ உயரம் உள்ள பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாகச்

செதுக்கப்பட்டுள்து. இதில் காளையின் கயிற்றை இரு வீரர்கள் பிடித்தபடி உள்ளனர் (Subramanian, 1985)[4].

வீரன் அருகே பெண்ணும் ஆணும் காட்டப்பட்டுள்ளனர். எனவே இது சதிக்கல்லாகவும் இருக்கலாம். எருது சிற்பத்தின் கீழ்ப்பகுதியில் மூன்று உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. பெண் ஒருவர் கைகளை உயர்த்தியபடி நிற்கிறாள். அடுத்தது ஒருவர் மேளம் போன்ற இசைக் கருவியை வாசிக்கின்றார். அடுத்த ஒருவர் குனிந்தநிலையில் பறை போன்ற இசைக்கருவியை வாசிக்கின்றார். இறந்த விரன் சொர்க்கம் செல்வதை வழி அனுப்புவது போல் காட்சி அமைந்துள்ளது.

காளையை அடக்கியோ அல்லது மீட்டோ வீரன் உயிர் நீத்திருக்கலாம் என்றும் காளையை அடக்கிய வீரன் அதைப் பிடித்துக்கொண்டு வரும்போது அவனது உறவினர்கள் இசைக்கருவிகள் இசைத்து வரவேற்கின்றனர் என்றும் கருதுமாறு புடைச்சிற்பம் அமைந்துள்ளது.

கலித்தொகையில் காளை அடக்குதலைப் பற்றி விரிவாகப் பல செய்திகள் உள்ளன.

“கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள்”

என்ற வரிகள் மூலம் காளையை அடக்கும் வீரனைத்தான் ஆயர்மகள் மணம் புரிவாள் என்பதை அறிய முடிகின்றது (Vanamamalai, 1975)[3]. இவ்வாறு காளையை அடக்கும் போது வீரமரணமடைந்த மறவனுக்கு எடுக்கப்படுவது “எருது பொருதார்கல்” எனப்படும் (Subramanian, 1985)[4]. சேலம் மாவட்டம் கருமந்துறை எனும் ஊரில் கிடைத்துள்ள 15ஆம் நூற்றாண்டு நடுகல் இவ்வகைப்பட்டதாகும். காளையின் கொம்புகளைத் தன் கரங்களால் பிடித்துச் சண்டையிடும் வீரனின் புடைச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது (Srinivasan, 1974)[5].

**நாய்க்கு நடுகல்**

நன்றி என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது ‘நாய்’ தான். பண்டைய தமிழர் நாயைக் காவலுக்கும் வேட்டைக்கும் பயன்படுத்துவதற்காக வளர்த்தனர். கி.பி 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எடுத்தனூர் என்ற ஊரில் கிடைத்த நடுகல்லில் வீரனுக்கு அருகில் நாயின் வீரத்தைப் பெருமைப்படுத்தும் வகையில் நடுகல் நடப்பட்டுள்ளது (Mahadevan, 1970)[6]. எருமைகளைக் கவர முற்பட்ட இரு கள்வர்களைக் கோவிவன் என்ற நாய் கடித்துத் துரத்தியபோது அவர்களால் தாக்கப்பட்டு இறந்தது. நிரை கவரும் போது இறந்த வீரனுடன் சேர்த்துக் கோவிவன் என்ற நாய்க்கும் நடுகல் நடப்பட்டது என்பதையும் அறியமுடிகின்றது(Vanamamalai, 1975)[3].

இவ்வாறு இறந்த வீரனின் பெயர், உருவம் ஆகியவற்றோடு நாயின் பெயரும் உருவமும் பொறித்து நடப்பட்டிருந்தது என்பதை அறியமுடிகின்றது. “ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டம் மத காசிரா வட்டம் பல்ராம் கொல்லர ஹட்டை என்ற ஊரில் நௌம்ப மன்னன்

ஆட்சி செய்த போது ‘புனிஷா” என்ற வேட்டை நாய் காட்டுப் பன்றியைக் கொன்று தானும் உயிர்விட்டது.

கடப்பை மாவட்டம் புலி வெண்டலா என்ற வட்டத்தில் லிங்கலா என்ற கிராமத்தில் போர குக்கா” என்ற நாய் எஜமானனுடன் இருந்தது. எஜமானன் இறந்த போது அதுவும் இறந்துவிடவே நாய்க்கும் நடுகல் எழுப்பப்பட்டது என்பதை அறியமுடிகிறது. நடுகற்கள் என்பது மறவர்களுக்கு மட்டுமல்லாமல் இதுபோன்ற விலங்குகளுக்கும் நடப்பட்டன என்றும், விலங்குகளை வேட்டையாடியமையால் அவையும் நடுகற்களில் இடம்பெற்றன என்ற செய்தியும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**கிளிக்கு நடுகல்**

ஜெயக்கேசி மன்னனாகிய கதம்ப மன்னன் கிளி மீது கொண்டிருந்த அன்பினால் தீயில் விழுந்து உயிர்விட்டுள்ளான். ஜெயகேசியின் செல்லக்கிளி அவன் உணவு உண்ணும் போது தானும் உடனிருந்து உணவினை உண்ணும் (Murugaiyan, 2008)[7]. ஒரு நாள் அரசனுடைய இருக்கைக் கீழே பூனை ஒன்று இருந்தது அதனைக் கண்ட கிளி பயந்து கொண்டது. மன்னன் பல முறை ஆசையாக அழைத்தும் கூண்டலிருந்து வெளியே வர மறுத்தது. இறுதியாக அரசன் சினத்துடன் கத்தினான். கிளியும் கூண்டிலிருந்து வெளியே வந்தது. அப்போது மன்னனின் இருக்கைக்குக் கீழ் இருந்த பூனைத் தீடீரெனப் பாயந்து கிளியைக் கொன்றது. நிகழ்ந்த சம்பவத்தை நேரில் கண்ட அரசன் உயிர்விட முனைந்து தீயில் விழுந்தான். தமிழகத்தில் குருசிலாப்பட்டு கிராமத்தில் நாடோடிக் கலைஞன் ஒருவன் கிளிக்காக உயிர்விட்டதை க.இராசன் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார் என்று ச.கிருஷ்ணமூர்த்தி தம் நூலில் பதிவுசெய்துள்ளார் (Zvelebil, 1964)[8].

**முடிவுரை**

பீடும் பெயரும் பொருந்திய நடுகற்கள் எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுவது போலவே வரலாற்று நடுகற்களிலும் இடம்பெற்றுள்ளன (Nagagothi, & K. Muniisvaran, 2020)[9]. இறந்தவர் மீது கொண்ட அச்சமும், நம்முன்னோர் நம்மைப் பாதுகாப்பர் என்ற நம்பிக்கையும் நடுகல் வழிபாட்டிற்கு மிகவும் முக்கியத்துவமாக அமைந்தன. நடுகற்களில் விலங்குகளின் உருவங்களும் இடம் பெற்றிருந்தன என்பதை அறியமுடிகின்றன. மனிதனுக்கு மட்டும் அல்லாமல் கோழி, நாய் ஆகியவற்றிற்க்கும் நடுகற்கள் நடப்பட்டன என்பதை அறியமுடிகின்றது. நடுகற்களின் அமைப்பையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளையும் கொண்டு, அதன் காலகட்டம், ஆட்சிமுறை, எழுத்து வடிவங்கள், போர்முறைகள், வழிபாட்டு முறைகள் முதலிய பல்வேறு வரலாற்றுப் பின்புலங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Srinivasan. K.K. (1990). *Some aspects of religion as revealed by Early Monuments and Literature of the South*, Madras. *Journal of Madras University*.
2. Burton Stein. (1976), Essays on South India, New Delhi, Vikas Publishing House.
3. Vanamamalai, N. (1975). Herostone Worship in Ancient South India. *Social Scientist*, *3*(10), 40– 46. https://doi.org/10.2307/3516159.
4. Subramanian. S.V. and Thirunavukkarasu. K.D. (1985). Historical Heritage of the Tamils, Tharamani, T.T.T.I.
5. Srinivasan. K.R. (1974). The megalithic burial and cairn fields of south India in the light of Tamil Literature and Tradition Ancient India. Madras. Madras University.
6. Mahadevan, I. (1970). Tamil-Brahmi Inscriptions. Govt of Tamilnadu, State Department of Archaeology.
7. Murugaiyan, A. (2008). "Object of donation in Tamil epigraphic texts (10th–11th centuries): Exploring the interaction between syntax and information structure" in S. Agesthialingom et al. (eds.), tamil̲ mol̲iyiyal putiya sikaraṅkaḷ [Felicitation volume for Professor S.V. Shanmugam, Annamalai University], 339–354.
8. Zvelebil, K.V. (1964). Tamil in 550 A.D: An interpretation of early inscriptional Tamil, Praha.
9. A. Nagagothi, & K. Muniisvaran. (2020). Semiotic analysis in the short story illustrations of Kashvi [*கஷ்வியின் ஓவியத்தில் காணப்படும் குறியியல் ஓர் ஆய்வு*]. *Muallim Journal of Social Sciences and Humanities*, *4*(1), 36-41. https://doi.org/10.33306/mjssh/53